[1971 டிசம்பர் 11

* 245 வினா—திரு. க. துரைசாமி : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராவணனை இழிவுபடுத்தும் முறையில் செய்யப்படும் பிரச்சாரத்தைத் தடை செய்யும் உத்தேசம் ஏதேனும் அரசிடம் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. க. துரைசாமி : தலைவர் அவர்களே, இராவணன் சிறந்த அறிவாளியாகவும் தமிழ் மன்னனாகவும் இருந்தான். ஆனால், வேண்டுமென்றே ஒரு சமூகத்தை இழிவுபடுத்தும் வகையில், இராவணனைக் கொடூரமானவனாகக் காட்சி தருகின்ற வகையில் சித்தரித்து, ஆண்டுதோறும் ஒரு முறை இராவணனுடைய தலையை எடுக்கக்கூடிய முறையில் மதப் பிரச்சாரங்கள் நடைபெறுகின்றன. அது தமிழ் ஆர்வமுடையவர்களுடையவும், தமிழ் மக்களுடையவும் மனத்தைப் புண்படுத்துவதாக இருக்கிறது. ஆகையால், அத்தகைய சம்பவங்கள் நடக்காமலிருக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினரவர்கள் டில்லியில் நடைபெறும் "இராம லீலா" பற்றிக் குறிப்பிடுகிறார் என்று நான் கருதுகிறேன். அதை நம்முடைய அரசு ஒன்றும் தடை செய்ய முடியாது. "நடவடிக்கை எடுக்குமா?" என்று கேட்டிருக்கிறார். வேண்டுமென்றே ஒருவரை இழிவுபடுத்தும் காரியங்களை யாரும் செய்யாமலிருப்பதுதான் நல்லது. அதை அப்படிச் செய்பவர்கள் உணர்வது சிறந்தது.

திரு. எம். சுரேந்திரன் : இராவண காவியம், இராமாயண காவியம் ஆகியவை கதைகள் என்றுதான் தெரிகின்றனவே தவிர, அவை சரித்திரபூர்வமான உண்மையாக இல்லாதபோது, இவற்றை மாணவர்களுக்குக் கல்லூரிகளில் கற்றுக்கொடுக்கவேண்டிய அவசியம் இருக்கிறதா என்பதைப்பற்றி அரசு யோசிக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : சில நல்ல கதைகளை மாணவர்கள் படிக்க வேண்டும் என்று சிலர் முயற்சி செய்வது தவறு அல்ல. ஆனால், இதிலே இராவணன், இராமன் ஆகிய இருவரும் கதைகளிலே வருகின்ற கதாபாத்திரங்களாக இருந்தாலும் இருவரையும் போற்றிப் பாராட்டுகின்ற இரு பிரிவினர் நாட்டிலே இருக்கிறார்கள்.

திரு. துரைமுருகன் : மாண்புமிகு முதலமைச்சரவர்கள் "இராம லீலா" பற்றிக் குறிப்பிட்டார்கள். வட நாட்டில் இராவணனை இழிவுபடுத்துகிறார்கள். அது தென்னாட்டு மக்களுடைய மனத்தைப் புண்படுத்துவதாகவும் ஒரு சமுதாயத்தினுடைய உள்ளத்தைப் புண்படுத்துவதாகவும் இருக்கிறது. எனவே, மத்திய அரசாங்கத்தினிடத்தில் பரிந்துரை செய்து, ஒரு சமுதாயத்தைப் புண்படுத்தும் விழாவை வடநாட்டில் கொண்டாடாமல் இருக்க மத்திய அரசு நடவடிக்கை எடுத்துக்கொள்ளுவதற்கு இந்த அரசு வழி செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு உறுப்பினருடைய இந்த உருக்கமான கேள்வி மத்திய அரசினுடைய கவனத்திற்கும் செல்லும் என்று நம்புகிறேன்.

1971 டிசம்பர் 11]

திரு. வி. கே. இராஜாப் பிள்ளை : தலைவர் அவர்களே, இலங்கையில் எங்கோ ஓரிடத்தில் இராவணனுடைய உடல் ஒரு மலை உச்சியின் மீது பாதுகாக்கப்பட்ட நிலைமையில் வைத்திருப்பதாகவும் அதைக் கண்டுபிடிக்க இலங்கை அரசு முயற்சி செய்வதாகவும் சில நாட்களுக்கு முன்பு பத்திரிகையில் செய்தி வந்தது. ஆனால், இராவணனைவிட, தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் வாலியின் பிரதாபம்தான் முக்கியமானது என்று நமக்குத் தெரிய வருகிறது. ஆகவே, வாலியின் உடல் எங்காவது இருக்கிறதா என்று கண்டுபிடிக்கவும், அதைப்பற்றி ஒரு காவியம் இயற்றி, பள்ளிகளில் அதைப் பாடப் புத்தகத்தில் சேர்க்கவும் அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இராவணனுடைய உடல் இருப்பதாகச் சொல்லப்படுவதும் வாலியினுடைய உடலைத் தேடுவதும் இரண்டுமே இராமாயணம்தான். (சிரிப்பு)

மத்திய காவல் படை

*246 வினா—**திரு. பெ. மலைச்சாமி :** மாண்புமிகு முதல் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மத்திய அரசின் நிர்வாகத்தில் உள்ள தொழிற்சாலைகளைப் பாதுகாப்பதற்காக காவல் படை ஒன்றினை தமிழகத்தில் மத்திய அரசு அமைத்துள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஆம். மணலியிலுள்ள சென்னை உரத் தொழிற்சாலையிலும் தூத்துக்குடி துறைமுகத் திட்டத்திலும் மத்தியத் தொழில் பாதுகாப்புப் படை வைக்கப்பட்டுள்ளது.

திரு. பெ. மலைச்சாமி : இந்தத் தொழிற்சாலையைப் பாதுகாப்பதன் பொறுப்பை மாநில அரசுப் போலீஸ் படையிடம் ஒப்படைத்தால் என்ன ? இதில் ஏன் மத்திய அரசு தம்முடைய நிர்வாகத்தினுடைய காவல் படையை அமைத்திருக்கிறது ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மத்திய பாதுகாப்புப் படை இங்கு இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்றும், இந்த மசோதா சட்டமாக இயற்றப்படுவதற்கு உடந்தையாக இருக்க முடியாது என்றும், மாநில அரசுகள் சார்பில் நாம் தெரிவித்திருந்தோம். ஆனால், மசோதா நம்முடைய கருத்துக்கு எதிராக நிறைவேற்றப்பட்டிருக்கிறது. ஆகவே, இது தவிர்க்க முடியாத ஒன்றாக இன்றைக்கு ஆகிவிட்டிருக்கிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இந்த மசோதா மத்திய அரசின் சார்பில் கொண்டுவந்தபோது அநேகமாக எதிர்க்கட்சியினரெல்லாம் எதிர்த்திருக்கிறார்கள். அப்படியிருக்கின்றபோது, தமிழகத்தில் இருக்கக்கூடிய மத்திய அரசினுடைய பொதுத் தொழிற்சாலைகளில் தமிழகத்திலிருக்கும் போலீஸ் பாதுகாப்பே போதுமானது, மேற்கொண்டு இது தேவை இல்லை என்று இப்போதாவது நம்முடைய அரசு மத்திய அரசுக்குத் தகவல் கொடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மீண்டும் ஒரு முறை சமயம் ஏற்படுகிற நேரத்தில் அதுபற்றிய கருத்தினை மாநில அரசு மத்திய அரசுக்குத் தெரிவிக்கும்.